Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............
நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அரூர்

**வழக்கு எண். CC 28/2026**

## வழக்கு சாட்சி எண். PW2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சத்யா | கிராமம் | : | அரூர் |
| கணவர் பெயர் | : | முருகன் | தாலுக்கா | : | அரூர் |
| வயது | : | 42 | மாவட்டம் | : | தருமபுரி |

(எதிரி ஆஜர்)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 06nd **Day of July 2026.**

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது அரூர் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன்.

கடந்த 04.11.2025ம் தேதி நான் பணியில் இருந்த போது 14.00 மணிளவில் அரூர் மது விலக்கு காவல் உதவி ஆய்வாளர் புஷ்பாகரன் அவரது தலைமையில் நானும், அசா-1 ஆகியோரும் அரூர் எல்லைக்குட்பட்ட இந்திராநகர் அருகே கண்காணித்து கொண்டு இருந்தபோது பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட ஆஜர் எதிரி லட்சுமி என்பவர் எங்களை கண்டதும் தப்பியோட முயன்றார் அவரை நாங்கள் சுற்றி வளைத்து பிடித்து விசாரித்த போது அரசு அனுமதியின்றி அரசு மதுபானத்தை விற்பதற்காக சில்லரையாக வாங்கி அதிக விலைக்கு விற்பனை செய்ய எதிரி அரசு

உரிமம் இன்றி 180 ml அளவு கொண்ட Black Pearl-26 பாட்டில்களை விற்பதற்காக வைத்திருப்பதாக எதிரி சொன்னார். மேற்படி மதுபாட்டில்களை சம்பவயிடத்திலேயே தனிநபர் சாட்சியம் யாரும் முன்வராததால் நானும் அசா-1 என்பவர் முன்னிலையிலும் கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகசரில் நானும் என்னுடன் வந்த அசா-1 என்பவரும் சாட்சி கையொப்பம் இட்டோம். கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தை காவல் ஆய்வாளர் உயர் அதிகாரியின் உத்தரவு பெற்று நிலைய இருப்பில் வைத்துள்ளார்.

இன்று என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான். **கைப்பற்றுதல் மகசர் ஏற்கனவே அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுள்ளது.**

பின்னர் எதிரியுடன் நிலையம் வந்து எதிரி மீது வழக்கு பதிவு செய்தார். வழக்கு தொடர்பாக காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவ இடத்தின் அருகில் வீடுகள் உள்ளது என்றால் சில வீடுகள் உள்ளது. சம்பவதை யாரேனும் பார்த்தார்கள் என்றால் பார்த்தார்கள். எதிரி தப்பியோட முயன்றாரா என்றால் எந்த திசையில் தப்பியோட முயன்றார் என்றால் முயற்சிக்கும் போது நாங்கள் பிடித்துவிட்டோம். யார் முதலில் எதிரியை பிடித்தார்கள் என்றால் நாங்கள் அனைவரும் தான் பிடித்தோம். எதிரியிடம் இருந்தும் எந்த ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை. சம்பவ இடத்தில் இருந்து மாதிரி கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தும், சம்பவ இடத்தில் நகல் எடுக்கும் வசதி இல்லாதால் காவல் நிலையம் வந்து நகல் எடுத்து கையொப்பம் பெற்றோம். நான் சொல்வது போல் ஒரு சம்பவம்

நடக்கவில்லை என்றும், அவ்வாறு நடந்து இருந்தால் பொது மக்களையும் சாட்சிளாக சேர்த்திருப்போம் என்றால் சரியல்ல. புள்ளி விவர கணக்கிற்காக இந்த வழக்கை எதிரியின் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அரூர்.**

Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............
நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அரூர்

**வழக்கு எண். CC 28/2026**

வழக்கு சாட்சி எண். PW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுதாகர் | கிராமம் | : | அரூர் |
| தந்தை பெயர் | : | குணசேகரன் | தாலுக்கா | : | அரூர் |
| வயது | : | 47 | மாவட்டம் | : | தருமபுரி |

(எதிரி ஆஜர் ).

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 06nd **Day of July 2026.**

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது அரூர் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன்.

கடந்த 04.11.2025ம் தேதி நான் பணியில் இருந்த போது 14.00 மணிளவில் அரூர் மது விலக்கு காவல் உதவி ஆய்வாளர் புஷ்பாகரன் அவரது தலைமையில் நானும், தலைமை காவலர் 421 சத்யா ஆகியோரும் அரூர் எல்லைக்குட்பட்ட இந்திராநகர் அருகே கண்காணித்து கொண்டு இருந்தபோது பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட ஆஜர் எதிரி லட்சுமி என்பவர் எங்களை கண்டதும் தப்பியோட முயன்றார் அவரை நாங்கள் சுற்றி வளைத்து பிடித்து விசாரித்த போது அரசு அனுமதியின்றி அரசு மதுபானத்தை விற்பதற்காக சில்லரையாக வாங்கி அதிக விலைக்கு விற்பனை

செய்ய எதிரி அரசு உரிமம் இன்றி 180 ml அளவு கொண்ட Black peral brandy-26 பாட்டில்களை விற்பதற்காக வைத்திருப்பதாக எதிரி சொன்னார். மேற்படி மதுபாட்டில்களை சம்பவயிடத்திலேயே தனிநபர் சாட்சியம் யாரும் முன்வராததால் நானும் தலைமை காவலர் சத்யா என்பவர் முன்னிலையிலும் கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகசரில் நானும் என்னுடன் வந்த தலைமை காவலர் சத்யா என்பவரும் சாட்சி கையொப்பம் இட்டோம். கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தை காவல் ஆய்வாளர் உயர் அதிகாரியின் உத்தரவு பெற்று நிலைய இருப்பில் வைத்துள்ளார்.

இன்று என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். **கைப்பற்றுதல் மகசர் அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் எதிரியுடன் நிலையம் வந்து எதிரி மீது வழக்கு பதிவு செய்தார். வழக்கு தொடர்பாக காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரியை கைது செய்து காவல் நிலையம் அழைந்து வந்து தான் வழக்கு ஆவணங்கள் தயார் செய்தோம் என்றால்சரிதான். சம்பவ இடத்தின் அருகில் வீடுகள் உள்ளது என்றால் சில வீடுகள் உள்ளது. சம்பவ இடத்திற்கும் அரூருக்கும் சுமார் 7கி,மீ என்றால் சரிதான். எனக்கு நான்கு சக்கர வாகனம் ஓட்ட தெரியாது என்றால் சரிதான். காவல் நிலையத்தில் இருந்து அரசு மதுவிலக்கு பிரிவுக்கென ஒதுக்கப்பட்ட வாகனத்தில் நாங்கள் ரோந்து பணிக்கு சென்றோம். அந்த வாகனத்தின் ஓட்டுநர் யார் லோகேஷ் என்பவர் ஆவார். அவருடன் சேர்ந்து மொத்தம் 4 நபர்கள் சென்றோம். அந்த சம்பவத்தை ஓட்டுநரும் பார்த்தாரா என்றால் வழக்கு சம்பவம் பற்றி தெரியாது.

சம்பவ இடத்திற்கு 100 மீட்டருக்கு முன்பே வாகனத்தை நிறுத்தி விட்டோம். நான் சொல்வது போல் ஒரு சம்பவம் நடக்கவில்லை என்றும், அவ்வாறு நடந்து இருந்தால் பொது மக்களையும் சாட்சிளாக சேர்த்திருப்போம் என்றால் சரியல்ல. புள்ளி விவர கணக்கிற்காக இந்த வழக்கை எதிரியின் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அரூர்.**